# காலந்தோறும் நாடகக்கலை

**முனைவர் ப.செந்தில் முருகன்[1] & முனைவர் பெ. இளையாப்பிள்ளை[2]**
**[1]முதுமுனைவர் பட்ட ஆய்வாளர் & [2]நெறியாளர்**
**இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,**
**தஞ்சாவூர்.**

1

**ஆய்வுச் சுருக்கம்**

ஆயக்கலைகள் அறுபத்து நான்கு என்பது இலக்கியங்களின் வழி அறியப்படும் செய்தியாகும். அவற்றின் நிரலமைப்பில் இருபதாவது இடத்தை நாடகக்கலை பெற்றுத் திகழ்வது மனங்கொள்ளத்தக்கதாகும். இத்தகு நாடகம் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியந்தொட்டு பல்வேறு இலக்கியங்களிலும் காணலாகின்றன. முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் ஆட்சி காலமான ஆறு மற்றும் ஏழாம் நூற்றாண்டுகளில் பல்வேறு கலைகள் புத்துயிர் பெற்றன. அவற்றுள் நாடகக்கலையும் புத்துயிர் பெற்றது. இராசராச சோழன், நாயக்க மன்னர்கள் போன்றவர்களால் வளப்படுத்தப்பட்ட நாடகக்கலை, பல்வேறு காலங்களில் அதன் கருப்பொருளை மையமாகக் கொண்டு அக்காலச் சமூக நிலைகளை வெளிச்சமிட்டுக் காட்டவல்லதாக அமைந்துள்ளது. மேலும், தமிழ்நாட்டை ஆட்சி செய்த முன்னாள் முதலமைச்சர்களான அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி ஆகியோரும் நாடகக் கலையை வளர்த்து, அதன்மூலம் தாங்களும் வளர்ச்சிப் பெற்றுள்ளனர். இவற்றினை உள்ளடக்கும் நோக்கில் காலந்தோறும் நாடகக்கலை என்னும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

**திறவுச் சொற்கள்** : நாடகம், நாடகக்கலை, காலந்தோறும் நாடகம், நாடகப் படிநிலைகள்

**முன்னுரை**

உலக மொழிகளில் உயர்ந்த வளமையும் செழுமையும் கொண்ட மொழியாக விளங்குவது தமிழ். இதன் செழுமைக்குப் பல்வேறு காரணங்கள் இருப்பினும், முதன்மைக் காரணமாகத் திகழ்வது யாதெனில், தமிழ் மொழியின்கண் காணலாகும் முப்பகுப்பான இயல், இசை, நாடகம் என்பதே ஆகும். இவற்றுள் மூன்றாம் நிலை பெற்ற நாடகமானது இயலையும் இசையையும் உள்ளடக்கி விளங்கவல்லது. நாடகக் கலையானது தமிழ் உலகில் தொன்மைமிக்க கலை வடிவமாகும். நாடகம் என்பதை அறிஞர் பெருமக்கள் நாடு + அகம் = நாடகம் எனவும், நாட்டை அகத்தில் கொண்டது நாடகம் எனவும், அகம் நாடு, உன்னுள் நோக்கு என்றெல்லாம் பொருள் உரைக்கின்றனர்.

நாடகத்தின் தோற்றம், அதன் தொன்மை மற்றும் வளர்ச்சி நிலைகள் குறித்தும், நாடகக் கலையின் இன்றைய போக்குகள் குறித்தும், தற்காலத்தில் நாடகக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சமூக ஏற்பிசைவு குறித்தும் ஆராயப் பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது எனினும், நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி என்பதைக் கருத்தில் கொண்டு காலந்தோறும் நாடகக்கலையின் கூறுகளையும், நாடகங்களின் மையக் கருப்பொருள்களையும் ஆராய்வதன் மூலம், முந்தைய காலக்கட்டங்களில் தமிழ்நாட்டின் உண்மையான சமூக நடைமுறைகளைக் கண்டறிய உதவும் என்பதால், இவ்வாய்வுக் கட்டுரையானது நாடகக் கலையினைக் காலந்தோறும் ஆய்வதன் அடிப்படையில் அமையபெற்றுள்ளது.

**நாடகக்கலையின் வளர்ச்சிப் படிநிலைகள்**

நாடகக்கலையின் தோற்றமானது போலச் செய்தல் என்னும் பண்பிலிருந்து தோன்றியதாக அறியப்படுகின்றது. போலச் செய்தல் என்பது ஒருவர் செய்வது போல அப்படியே செய்து காட்ட வேண்டும் என்ற செயல்பாடாகும். இதன் தொடர்ச்சி நிலை இன்றளவும் நம்மிடம் காணலாகும் தன்மையை உணர முடிகின்றது. இதன் மற்றொரு வடிவமே பல குரல் பேசும் தன்மையாகும். இன்றளவில் சிலர், பல்வேறு நடிகர்கள் மற்றும் அரசியல் பிரபலங்கள் போன்று, பல்வேறு குரல்களில் பேசுதலைக் காணலாம். அவ்வாறு பல குரலில் பேசும் நபர்களைக் கூர்ந்து நோக்குங்கால், மற்றொருவரின் குரலில் பேசும்போது அவரது உடல்மொழியும் கூட, அந்தக் குரலுக்கு உரியவரின் உடல்மொழியோடு ஒத்திசைவதைக் கண்ணுற்று உணரலாம். இந்தப் போலச் செய்தல் என்பதே நாடகக்கலையின் தோற்றத்திற்கு அடிப்படையாகும். ஆயினும் இதன் வளர்ச்சிப் படிநிலைகளை ஆராயும் போது, தோல்பாவைக் கூத்து, மரப்பாவைக் கூத்து ஆகியன பொம்மலாட்டமாக வளர்ச்சியடைந்து அதன் பின்னர் நாடகம் என்னும் வடிவம் தோற்றம் பெற்றுள்ளதை உணரமுடிகின்றது.

**இலக்கியக் குறிப்புகள்**

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம். (தொல்.அகத்.நூ.53)**

தமிழில் முழுமையாக நமக்குக் கிடைத்த முதல் நூலான தொல்காப்பித்திலேயே நாடகம் என்னும் சொல் கையாளப்பட்டுள்ளதன் மூலம் அதன் தொன்மை அறியலாகின்றது. பண்டைய தமிழ் இலக்கியங்களில் நாடகம் என்பது கூத்து என்னும் பெயராலும் வழங்கப்பட்டு வந்துள்ளன. மேலும் நாட்டியம், நாடகம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான சொல்லாகக் கூத்து என்னும் சொல் வழக்கிலிருந்தது அறிய முடிகின்றது. கி.மு.31 ஆம் நூற்றாண்டு நூலாகக் கருதப்பட்டு வரும் திருக்குறளில்,

**கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று. (குறள்.332)**

எனும் குறள் காணலாகின்றது. இதன் பொருள் யாதெனில், கூத்தாட்ட அரங்கிற்குக் கூட்டம் வருவது போல் சிறுகச் சிறுக செல்வம் சேரும். கூத்தாட்டம் முடிந்ததும் கூட்டம் கலைவது போல் செல்வமானது மொத்தமாய்ப் போய்விடும் என்பதாகும். இதன் மூலம் வள்ளுவர் காலத்துச் சமூகமும் அதற்கு முற்பட்ட சமூகமும் கூத்தாட்டம் காணுதலைப் பொழுதுபோக்காகக் கொண்டு விளங்கியுள்ளன என்பது புலப்படுகிறது. மேலும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும், பக்தி இலக்கியக் காலத்திலும் நாடகம் பற்றிய குறிப்புகள் பெறப்படுகின்றன.

**காலந்தோறும் நாடகம்**

கலைகளின் வளர்ச்சியில் பல்லவப் பேரரசர்களின் பங்கு மிகவும் போற்றுதலுக்குரியதாகும். 6 மற்றும் 7 –ஆம் நூற்றாண்டுகளில், குறிப்பாக, கி.பி.590 முதல் கி.பி.630 ஆகிய காலக்கட்டங்களில் தமிழ்நாட்டுப் பகுதிகளை ஆட்சி செய்த முதலாம் மகேந்திரவர்ம பல்லவன், வடமொழியில் இயற்றிய மத்தவிலாச பிரஹசனம் என்னும் நாடக நூலானது, சைவ மற்றும் பௌத்தத் துறவிகளைக் கருப்பொருளாய் கொண்ட நகைச்சுவை நாடகமாகும். தொடக்கக் காலத்தில் சமணச் சமயத்தைத்

தழுவி இருந்த இம்மன்னன், பிற சமயங்களை இழித்துரைக்கும் நோக்கில் அமைத்த நாடக நூலாகும். இந்த நாடகத்தின் மூலம் சைவப் பிரிவுகளான கபாலிகம், பாசுபதம் ஆகியவற்றின் பழக்க வழக்கங்களையும் புத்தத் துறவிகளின் செயல்பாடுகளையும் அறிய முடிகின்றது. பல்லவப் பேரரசின் தலைநகரான காஞ்சிபுரத்தில், மது போதையில் நிதானம் இழந்திருக்கும் கபாலிகன் சத்யசோமன் அவனது மனைவி தேவசோமா ஆகியோரின் செய்கைகளை விவரிக்கிறது. இவை உண்மை என்று உறுதிபடக் கூற இயலாது எனினும், சைவர்களில் இருந்த பிரிவுகளை இனங்கான உதவுகின்றது.

11 - ஆம் நூற்றாண்டில் இராசராச சோழ மன்னனின் காலத்தில் இராசராசேசுவர நாடகம் நடைபெற்றது என்ற செய்தி கல்வெட்டுகளின் மூலம் அறியப்பட்டுள்ளதையும், இந்நாடகத்தில், இராசராசனின் வாழ்க்கை வரலாறு, ஆட்சிச் சிறப்பு, சோழ நாட்டு வளம், அவனது வீரம், ஆட்சிச் சிறப்பு, நீதி பரிபாலனம் என்பவற்றோடு பல அருஞ்செயல்களையும் பற்றிக் கூறுகின்றது என்றும், இந்நாடகத்தை முக்கியமான காலங்களில் இராசராசனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெரிய கோவிலில் நடித்துக் காட்டினர் என்றும், அவ்வாறு நடிப்பதற்குத் தேவையான பொருளுதவிகளை, முதலாம் இராசேந்திரன் வழங்கினான் என்றும், இந்நாடகத்தின் ஆசிரியர் பெயர் முதலான வரலாறுகள் எவையும் கிடைத்தில என்றும், இவையாவும் இராசேந்திரனது கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது என்றும், தமிழிலக்கியச் சரித்திரத்தில் காவியக் காலம் என்னும் நூலில் வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். இதன் மூலம் இராசராச மன்னன் மற்றும் அவரது மகன் இராசேந்திர சோழனின் அணுகுமுறைகளும் பெறப்படுகின்றது.

கி.பி. 1529 முதல் கி.பி.1736 வரையிலான காலக்கட்டங்களில் செஞ்சி, மதுரை, தஞ்சை ஆகிய பகுதிகள் யாவும் நாயக்க மன்னர்களால் ஆளப்பட்டன. இவர்களது காலத்தில் குறவஞ்சி நாடகங்கள் தோன்றியுள்ளன. தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான குறவஞ்சி இலக்கிய வகைமையை அடிப்படையாகக் கொண்ட நாடக வடிவங்கள் புகழ்பெற்றுத் திகழ்ந்தன. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள சிலைகளில் அரிச்சந்திரன் சிலை, குறவன் மற்றும் குறத்தி சிலைகள் உள்ளத்தை ஈர்ப்பனவாகக் காணப்படுகின்றன. இதன் மூலம் சிறந்த நாடகக் கலை வடிவங்களுக்குச் சிலை வடிக்கும் வழக்கமும் தோற்றம் பெற்றுள்ளன என்பதை ஊகித்தறிய முடிகின்றது.

17 – ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 18 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நொண்டி நாடகங்கள் புகழ்பெற்று விளங்கியுள்ளன. சீதக்காதி நொண்டி நாடகம், திருச்செந்தூர் நொண்டி நாடகம், சாத்தூர் அய்யன் நொண்டி நாடகம், திருவிடைமருதூர் நொண்டி நாடகம், ஞான நொண்டி நாடகம், திருக்கச்சூர் நொண்டி நாடகம், ஐயனார் நொண்டி நாடகம், கள்வன் நொண்டிச் சிந்து போன்றவை நொண்டி நாடகங்களுள் சிலவாகும். இந்நாடகங்களின் கருப்பொருளை ஆய்ந்து நோக்கினால், செல்வக் குடியில் பிறந்த ஒருவன், ஒழுக்கங்கெட்டு, வறுமையுற்று, பல்வேறு இன்னல்களைச் சந்தித்துப் பின்னர் திருந்தி வாழ்வதாக அமையும் நாடகங்களாகும். இதன் மூலம் அந்நூற்றாண்டுகளில் ஒழுக்கக் கேடுகளைத் தவிர்க்க விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமும், அவ்விழிப்புணர்வு மக்களை விரைவில் சென்றடைய தகுந்த ஊடகமாக நாடகத்தைத் தேர்ந்தெடுத்துள்ளமையும் அறியமுடிகின்றது.மேலும்,

18-ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயர் 258 இசைப்பாடல்களில் இராமாயணக் கதையை நாடகவடிவில் வடிவமைத்தார். கீர்த்தனைகளால் தமிழில் முதன்முதலில் இசைநாடகம் படைத்தார். ஒரு கதையைச் சுவையாக மக்களுக்குச் சொல்வதற்குக் கீர்த்தனைகள் ஏற்றன என்பதை நிறுவினார். அருணாசலக் கவிராயரது 'இராமநாடகக் கீர்த்தனை' திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் அரங்கேறியது. இதன் மூலம் இறைபொருள் பொருந்திய நாடகங்கள், கோவில் வளாகங்களில் அரங்கேற்றம் செய்யும் நடைமுறைகள் தோன்றியுள்ள தன்மைகளை அறியலாம். அதே காலக்கட்டங்களில் கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரம், தீண்டாமை ஒழிப்புக் குறித்த விழிப்புணர்வு நாடகமாக நந்தனாரை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும். நந்தனார் சரித்திரத்தைத் தன் காலத்திலேயே வெளியிட்டார் கோபாலகிருஷ்ண பாரதியார். ஆனால் அப்போது திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இதில் உள்ள இலக்கணப் பிழைகளை மட்டுமல்லாது பொருள் குற்றம், கருத்தில் பிழை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி, இந்த நந்தனார் சரித்திரத்திற்குப் பாயிரம் எழுதிக் கொடுக்க மறுத்து வந்தார். பின்னால் கோபாலகிருஷ்ண பாரதியார் நடையாக நடந்து, மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மனத்தைத் தன் இசையால் மாற்றி, பாயிரம் எழுதி வாங்கினார் என உ.வே.சாமிநாதையர் தன்னுடைய என் சரித்திரத்தில் குறிப்பிடுகிறார். இதன் மூலம் நாடகங்களில் உள்ள பிழைகளைச் சுட்டிக் காட்டும் வழக்கமும் நடைமுறையில் இருந்துள்ளன என்பது தெளிவாகின்றது. 18 –ஆம் நூற்றாண்டு காலக்கட்டத்தில் எழுந்த பெரும்பாலான நாடகங்கள் புராணக் கதைகளையே பெருமளவுத் தழுவியுள்ளன என்பதை உணரமுடிகின்றது.

19 – ஆம் நூற்றாண்டிலேயே சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை உள்ளடக்கிய நாடகங்கள் அதிகம் மலர்ந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது காசி விசுவநாதரின் டம்பாச்சாரி விலாசம். இசை நாடகமாகப் படைக்கப்பட்ட இந்நூலில் களம், அரங்கம் போன்ற மரபுகள் எதுவும் இல்லை; ஒரே மூச்சில் கதை சொல்லப்படுகிறது. கண்ணகியின் கதையை ஒத்த இதன் கதை முழுவதும் கட்டியங்காரன் ஒருவன் கூறுவது போல அமைந்துள்ளது. பணக்காரன் ஒருவன் தாசி வீட்டுக்குச் சென்று தன் செல்வத்தை இழந்து பின் மனம் திருந்தி வாழ்வதே இதன் கதை. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு 1954 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமே ரத்தக் கண்ணீர் எனும் திரைப்படமாகும். கிருஷ்ணன் - பஞ்சு இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எம். ஆர். ராதா அவர்கள் மிக முக்கியக் கதைமாந்தராக நடித்திருப்பது நாமறிந்ததே.

இதன் பின்னர் 20 – ஆம் நூற்றாண்டில் விடுதலைப் போராட்ட உணர்வுகளை மேலிடச் செய்யும் நோக்கில், கதரின் வெற்றி, தேசியக் கொடி, தேசபக்தி போன்ற நாடகங்கள் மக்களிடையே சுதந்திர விழிப்புணர்வுகளைத் தூண்டின. தேசியக் கொடி நாடகம் நாகபுரியில் நிகழ்ந்த போராட்டத்தைப் புலப்படுத்துகிறது. நாகபுரியில் ஆங்கிலேயர்கள் வாழ்ந்த தெருவில் தேசியக் கொடியைப் பறக்கவிடக் கூடாது என்று காவலர்கள் தடை செய்தனர். தேசியத் தொண்டர்கள் தேசியக் கொடியுடன் நாள்தோறும் அந்தத் தெருவில் செல்வதைப் போராட்டமாக்கினர். எண்ணற்ற தொண்டர்கள் இப்போராட்டத்தில் சிறை சென்றனர். இந்த அடிப்படையில்தான் தேசியக்கொடி நாடகம் உருவாக்கப் பட்டது.

**முதல்வர்கள் வளர்த்த நாடகக்கலை**

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர்களான அறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் மு.கருணாநிதி ஆகியோர் எழுதிய பல்வேறு நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. காதல் ஜோதி, கல்சுமந்த கசடர் ஆகியன அறிஞர் அண்ணா இயற்றிய நாடகங்கள் ஆகும். கல்சுமந்த கசடர் என்ற பெயரில் அண்ணா அவர்கள்

எழுதிய நாடகம், தேனி கலவர வழக்கு நிதிக்காக 11-7-1952 அன்று, கம்பம் வ.உ.சி.அரங்கில் அரங்கேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் நல்லதொரு செயல்பாடுகளைச் செய்ய நாடகம் மூலம் நிதி சேர்க்கும் வழக்கம் அறிஞர் அண்ணா அவர்களால் சிறப்புற்று விளங்கியுள்ள பாங்கினை உணர முடிகின்றது. மேலும் கலைஞர் மு.கருணாநிதி எழுதிய தூக்குமேடை, மகான் பெற்ற மகான் போன்ற நாடகங்கள், அவரது சமூகச் சீர்திருத்த நாடகங்களுக்கு எடுத்துக்காட்டுகள். அதேபோல் நச்சுக்கோப்பை, சாக்கிரட்டீசு போன்ற நாடகங்கள் மூடநம்பிக்கையை எதிர்த்துப் பரப்புரை செய்த கலைஞரின் நாடகங்கள் ஆகும்.

**முடிவுரை**

நாடகம் என்பது அகத்தை நாடச் செய்வது. உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி. தோல்பாவைக் கூத்து, மரப்பாவைக் கூத்து, பொம்மலாட்டம் இவற்றின் அடுத்த படிநிலையாக வளர்ச்சிப் பெற்றதே நாடகம் ஆகும். தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியங்கள் ஆகியவற்றில் நாடகம் பற்றிய குறிப்புகள் காணலாகின்றன. முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் நாடகக்கலைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. நாயக்க மன்னர்களும் நாடகக்கலையினைப் போற்றி வளர்த்துள்ளனர். 18 – ஆம் நூற்றாண்டுகளில் இதிகாசப் புராணக் கதைகள் நாடகத்தின் முக்கியக் கருப்பொருள்களாக விளங்கியுள்ளன. அதன் பிறகு அடுத்த நூற்றாண்டுகளில் சமூகச் சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் பல்கிபெருகியுள்ளன. சுதந்திரப் போராட்டக் காலங்களில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் சிறந்த ஊடகமாக நாடகம் திகழ்ந்துள்ளது. அதன் பின்னர், தமிழ்நாட்டை ஆட்சி செய்த முதல்வர்களான அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி ஆகியோரும் நாடகக்கலையினைச் சிறந்த ஊடகமாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பன யாவும் காலந்தோறும் நாடகக்கலையினை ஆய்வதால் புலப்படுத்தப்பட்டுள்ள செய்திகளாகும்.

**துணைநின்ற நூல்கள்**

1. இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம் இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை – 2014.
2. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை – 2014.
3. வையாபுரிப்பிள்ளை.எஸ், (ஆசிரியர்), தமிழிலக்கியச் சரித்திரத்தில் காவியக் காலம், அலைகள் வெளியீட்டகம், சென்னை, 2010.
4. சாமிநாதையர்.உ.வே, (ஆசிரியர்), என் சரித்திரம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2014.
5. இராமசுவாமி.மு, (ஆசிரியர்), திராவிட இயக்கமும் கலைத்துறையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 2014.
6. அழகப்பன்.ஆறு,(ஆசிரியர்), தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பாரி நிலையம், சென்னை – 2010.
7. ராதாகிருஷ்ணன்.டி.வி, (ஆசிரியர்), தமிழ் நாடக மேடை தோற்றமும் வளர்ச்சியும், திருவரசு புத்தக நிலையம், சென்னை – 2017.